# அத்தியாயம் இரண்டு

## இரவில் மின்னும் குகைப் பாதை

ஆறாவது நாள் மிக மெதுவாக நகர்கிறது. பகற்பொழுதைப் பின்னிக்கொண்டிருந்த அமைதி அவ்வப்போது ஒரு தையல் கண்ணியைத் தவற விடுகிறது. 'துபோன், நான் உனக்கு ஒரு விஷயம் சொல்கிறேன். ஷேக்ஸ்பியர் பற்றி எப்போதாவது கேள்விப்பட்டிருக்கிறாயா?' என்று பென்ட்டிங் கேட்டான்.

'நிச்சயம் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால், அவருக்கும் இதற்கும் என்ன சம்பந்தம்?' என்றான் துபோன்.

'ஹாம்லட் பற்றித் தெரிந்திருந்தால், பயங்கரமாக முற்றிவிட்ட நோய்கள் பயங்கரமான சிகிச்சையால் குணமாகலாம், ஆகாமலும் போகலாம் என்று ஷேக்ஸ்பியர் எழுதியிருப்பதும் தெரிந்திருக்கும்.'

பிறகு பல நிமிஷங்கள் மௌனம் ஆதிக்கம் செலுத்துகிறது. துபோனும் பென்ட்டிங்கும் அதிகம் பேசுவதில்லை. களைப்புடன் படுத்திருக்கிறார்கள், காத்திருக்கிறார்கள். அவர்கள் அதிகம் சாப்பிடவில்லை. மார்ட்டினைப் பற்றி நினைக்கிறார்கள். ஒருவரும் அவனைப் பற்றிப் பேசுவதில்லை. பேசத் தொடங்குவதற்குப் பயந்தார்கள். இருவரும் மற்றவர் நினைப்பதுபற்றி பயந்தனர். ஆனால் மார்ட்டின் இப்போது செத்துவிட்டான் என்று நினைத்தார்கள். தொற்றை முறிக்கும் மருந்துகள் அவன் உடலுக்குள் ஏற்கனவே செலுத்தப்பட்டுவிட்டன. அப்புறம் அவன் உடம்பைக் கீறிப் பார்ப்பார்கள்.

கதிர்கள் அவன் உடலில் எவ்வாறு கலந்திருக்கின்றன என்று பார்க்க விரும்புவார்கள். அழிவு எப்படி நிகழ்ந்திருக்கிறதென்று ஊன்றிப் பார்க்க வேண்டும், இயற்கையாக ஏற்படும் பேரழிவுகளை நிபுணர்கள் ஆராய்வதுபோல். பரிசோதனைக்குப் பிறகு எஞ்சியிருப்பதை ஒரு பெட்டிக்குள் வைத்து ஈயத்தால் மூடிவிட்டு, அவன் உடலை ஒரு பாதுகாப்பான ஆழத்தில் உடனே புதைக்க ஏற்பாடு செய்துவிடுவார்கள். கதிரியக்கக் கழிவுகள் பற்றி மிகுந்த எச்சரிக்கையுடனிருக்க வேண்டும். மார்ட்டின் மோலினார் இப்போது கழிவுப் பொருள். நாம் எல்லோரும் கழிவுகளாகிறோம். நம்மில் பலர் தீங்கற்றவர்கள், நம்மால் எந்த ஆபத்தும் இல்லை. ஒரு சவத்தை உதைக்கலாம், ஒன்றும் நிகழ்வதில்லை. ஆனாலும் சில பிணங்கள் ஆபத்தானவை. ஆபத்தான பிணங்களை ஜாக்கிரதையாகக் கையாள வேண்டும். அவை பேய்கள் என்று அழைக்கப்பட்டதுண்டு. அது முன்பு. இப்போது அந்தக் காலமெல்லாம் மாறிவிட்டது. கோட்டைகளும் பேய்களும் கடந்த கால விஷயங்கள். நம்முடைய ஆபத்தான பிணங்களை நாம் ஈயப் பெட்டிகளில், அவசியமானால் கான்கிரீட் பெட்டகங்களில்கூட, அவை ஒருபோதும் வெளியில் வந்துவிட முடியாதவாறு, வைக்கிறோம். அவை எளிதில் வெளியே நடமாட முடியாது, நாம் அவ்வளவு விஷயம் தெரியாதவர்களில்லை.

பேராசிரியர் வென்ஸ் அறைக்குள் வருகிறார். மிகுந்த முயற்சியின் பேரில் புன்னகையை வரவழைத்துக் கொள்கிறார். 'உங்களுக்குத் தேவையான வைட்டமின்கள் கொண்டுவந்திருக்கிறேன்' என்கிறார்.

'இன்று எங்களுக்கு என்ன கிடைக்கும்?' துபோன் கிண்டலாகக் கேட்கிறான்.

'பி 12' என்கிறார் மருத்துவர்.

'அப்படியானால் இன்றைக்கு இவ்வளவுதானா?'

‘இல்லை, போகப்போக உங்களுக்கு ஈரல் மற்றும் மால்ட் கிடைக்கும். அப்புறம் இன்னொரு ஊசி.’

‘எங்களை ரொம்பவும்தான் கவனித்துக்கொள் கிறீர்கள்’ என்று பென்ட்டிங் வறண்ட குரலில் கூறுகிறான்.

‘உங்களுக்காக நாங்கள் எல்லோரும் எவ்வளவு செய்கிறோம் என்பது மட்டும் உங்களுக்குத் தெரிந்தால்,’ என்கிறார் பேராசிரியர்.

பென்ட்டிங்கின் கிண்டல் அவருக்குப் புரியவில்லை. அவன் நல்ல மனநிலையில் இருக்கிறான், சிரிக்கிறான், அது இயற்கைக்குப் புறம்பானதாக இருக்கிறது. கொட்டை எழுத்துகளில், சுவரில் இவ்வாறு அறிவிக்க வேண்டும்.

**இங்கு சிரிக்கக் கூடாது.**
**சிரிப்பது கண்டிப்பாகத் தடை**
**செய்யப்பட்டிருக்கிறது. மீறுபவர் கட்டாய**
**உடலுழைப்புத் தண்டனைக்கு உள்ளாவார்கள்.**

ஆல்ஃபிரட் பென்ட்டிங் தன்னுடைய இடது கையால் தலையைத் தேய்க்கையில் முடி கட்டையாக வெட்டப்பட்டிருப்பதால் கையில் குத்துகிறது. அவனுக்கும் துபோனுக்கும் தலை கிட்டத்தட்ட மழிக்கப்பட்டது போலிருக்கிறது, குற்றவாளிகளைப் போல. துபோன் இளமையாகத் தோற்றமளிக்கிறான். ஆனால் அவனது பழைய கடுமையான முரட்டுத்தனம் அப்படியே இருக் கிறது. இதையெல்லாம் பற்றி நினைக்கும்போது அவனுக்கு மிகவும் பற்றிக்கொண்டுவருகிறது. அணு உலையின் அருகில் நேர்ந்த விபத்து, நோய் மற்றும் துன்பம், ஊசிகள், முடி கொட்டுவது (அது இப்போது குறைவதுபோல் தெரிகிறது), ரத்தப் பரிசோதனைகள், களிம்புகள், வயிற்றுப்போக்கு, சிறைவாசம், நம்பிக்கையின்மை. உள்ளக் குமுறலுக்கு ஆட்பட்டுவிடுகிறான். துபோன் கலக மனோபாவத்துடன் கொதித்தெழுவதற்குத் தயாராக இருக்கிறான்.

'சாவுக்குத் தள்ளப்பட்ட மனிதர்களுக்கு விசேஷ மான சாப்பாடு ஒன்றும் கிடையாதா?' என்கிறான் அவன்.

'சாவுக்குத் தள்ளப்பட்ட மனிதர்களா? யாரைக் குறிப்பிடுகிறீர்கள்?' என்று அமைதியாகக் கேட்டார் பேராசிரியர் வென்ஸ்.

'சாவுக்குத் தள்ளப்பட்டிருக்கும் அனைவரும், நான் புரிந்துகொண்டவரையில்.'

'சிறைச்சாலைகளில்தான் அந்த வழக்கமெல்லாம்.'

'இங்கே?'

'இது சிறைச்சாலை அல்ல. இது ஒரு கல்லூரி மருத்துவமனை. இங்கு சாவுக்குத் தள்ளப்பட்டவர்கள் என்று யாருமில்லை.'

'அப்படி இருக்கிறார்களென்று நான் நினைத்தேன்.'

'அப்படியானால் என்னைவிட உங்களுக்கு நிறைய விஷயம் தெரியும் இல்லையா?'

'அப்படியென்றால் நாங்கள்?'

துபோன் ஒரு மூர்க்கமான தாக்குதலை நிகழ்த்திக் கொண்டிருக்கிறான். முரட்டுத்தனத்திற்கு எப்போதும் முதல் சுற்றில் வெற்றியுடன் ஒரு உடனடி நன்மையும் கிடைக்கும். ஒரு கணம் அமைதி நிலவுகிறது. பேராசிரியர் வென்ஸ் சற்று ஆச்சரியமடைந்ததுபோலக் காணப் படுகிறார். பிறகு அமைதியாகக் கூறுகிறார், 'கூடிய சீக்கிரத்தில் குணமடைந்துவிடுவீர்கள் பாருங்கள். தன்னம்பிக்கையை இழக்கக் கூடாது.' இந்த பதிலில் இருந்த கண்ணியம் துபோனைக் கவருகிறது. பென்ட்டிங் இதையெல்லாம் கூர்ந்து கவனித்துக்கொண்டிருக்கிறான். எல்லாவற்றிலும் அவனுக்கு ஆழமான அக்கறை இருக் கிறது. ஆனால் தோற்பது யார் ஜெயிப்பது யார் என்பதைக் கடைசிவரை கூற முடியாதென்பது அனுபவத்திலிருந்து அவனுக்குத் தெரியும். கடைசிவரை நடிகர்கள் பார்வை யாளர்களாக இருக்க வேண்டும், பந்தயம் கட்டுபவர்கள் காத்திருக்க வேண்டும். மேலும், அவசியம் என்றால்

அவர்கள் நம்பிக்கையுடன் இருக்க வேண்டும், ஆனால் நம்பிக்கை என்பது ஒரு வெட்டிப் பொழுதுபோக்கு. நம்பிக்கை தனித்து நிற்பதில்லை, மனிதர்களைச் செயல்படச் செய்யவில்லை என்றால் அது முற்றிலும் உபயோகமற்றது. 'ஷேக்ஸ்பியர் வரிகளை நீ ஏன் பேராசிரியருக்குச் சொல்லக் கூடாது?' என்று துபோன் பென்ட்டிங்கிடம் கேட்கிறான். பென்ட்டிங் மல்லாந்து திரும்பியவாறு சொல்கிறான். 'பயங்கரமாக முற்றிவிட்ட நோய்கள் பயங்கரமான சிகிச்சையால் குணமாகலாம், ஆகாமலும் போகலாம்.' இவற்றை அவன் தெளிவாக உச்சரிக்கவில்லை. அவை ஜீவனற்று, களைப்புடன் ஒலிக்கின்றன.

'நீ என்ன அறிஞனா அல்லது ஷேக்ஸ்பியர் ரசிகனா?' டாக்டர் கேட்கிறார்.

'எதுவுமேயில்லை. அவ்வப்போது அவரது வாசகங்கள் ஞாபகம் வரும். கதே, முல்டாடுலி ஆகியோரின் சில வரிகள்கூடத் தெரியும். கொஞ்சம் ஓவிட்கூட. 'உங்களது பிரச்சினைகளுக்குப் பழகிக்கொண்டுவிட்டால் அவை உங்களைத் தொந்தரவு செய்யாது' என்று சொல்லியிருக்கிறார். ஆனால் அதற்கும் நமக்கும் சம்பந்தமில்லை' என்கிறான். அவன் களைப்பாக இருக்கிறான், மேற்கொண்டு எதுவும் சொல்லவில்லை.

துபோன் ஏதோ சொல்ல நினைக்கிறான், ஆனால் உண்மையில் அவனுக்கு என்னவென்று தெரியவில்லை. பேராசிரியர் வென்ஸ் அமைதியாகத் தன் வேலையைத் தொடங்குகிறார். அடுத்த நாள் துபோன் உற்சாகமாக இருக்கிறான். ஆனால் எதிர்பாராத விதத்தில் பென்ட்டிங் மோசமாக இருக்கிறான். துபோன் வளவளவென்று பேசிக்கொண்டிருக்கிறான். பென்ட்டிங் படுத்தவாறே கவனிக்கிறானே தவிர ஒன்றும் சொல்லவில்லை. 'நீ களைப்பாக இருந்தால் சொல் ஃபிரெட், அப்படி இருந்தால் நான் அதிகம் பேசவில்லை' என்கிறான் துபோன்.